**வணக்கம்**

**ஆகாஷ்வாணி - புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : வான்மதி**

நாள்: 08.10.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவிற்கு திமோர் லெஸ்டேவின் உயரிய விருது இன்று வழங்கப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட கேரள மாநிலம் வயநாட்டில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜே பி நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியா-மாலத்தீவு இடையே வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் ஒத்துழைப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

பாரீஸ் ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் வெண்கல பதக்கம் வென்று நாடு திரும்பிய இந்திய அணி வீரர்களை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.

மோடி-வயநாடு (19)

பிரதமர் திரு நரேந்திர மோடி நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட கேரள மாநிலம் வயநாட்டில் இன்று ஆய்வு மேற்கொண்டார். ஹெலிகாப்டர் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார். பின்னர் நிவாரண முகாம் மற்றும் மருத்துவமனைக்கும் சென்று அவர் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளின் நிலவரம் குறித்தும் அவர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். மேலும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பிரதமருடன் கேரள மாநில ஆளுநர் திரு ஆரிப் முகமது கான், முதலமைச்சர் திரு பினராயி விஜயன், பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு சுற்றுலாத் துறை இணை அமைச்சர் திரு சுரேஷ்கோபி உள்ளிட்டோர்

உடனிருந்தனர். இதனிடையே, அங்கு மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரண பணிகளில் ஈடுபட்ட ராணுவ படையினரின் சேவை முடிவுக்கு வந்ததை அடுத்து, மோப்ப நாய் பிரிவு உட்பட ராணுவத்தின் படை பிரிவிற்கு வயநாடு மக்கள் பிரியா விடை அளித்தனர். ஜூலை 30 ஆம் தேதி நிகழ்ந்த நிலச்சரிவில் மலை கிராமங்கள் உருக்குலைந்தன. இந்த நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 400 ஐ எட்டியுள்ளது. பெரும் உயிர் சேதத்தை எட்டியுள்ள இந்த நிலச்சரிவு, கேரள மாநிலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய நிலச்சரிவாக கருதப்படுகிறது. (NP|Delhi) RM|MA|10.08.2024

நட்டா (7)

இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜே பி நட்டா கேட்டுக் கொண்டுள்ளார். குஜராத் மாநிலம் ராஜ் கோட்டில் இதற்கான யாத்திரையை தொடங்கி வைத்து பேசிய அவர், மக்களின் இயக்கமாக இது உருவெடுக்க வேண்டும் என்று பிரதமர் அழைப்பு விடுத்துள்ளதை சுட்டிக்

காட்டினார். நேற்று தொடங்கிய இந்த இயக்கம் வரும் 15 ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக திரு நட்டா தெரிவித்துள்ளார்.

முர்மு (14)

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவிற்கு திமோர் லெஸ்டே உயரிய விருது இன்று வழங்கப்பட்டது. திமோர் லெஸ்டே அதிபர் திரு Jose ramos Horta இவ்விருதினை திருமதி திரவுபதி முர்முவிற்கு வழங்கினார். இருநாடுகளுக்கு இடையேயான நட்புணர்வின் வெளிப்பாடாக இவ்விருது உள்ளதாக குடியரசு தலைவர் தெரிவித்தார். அந்நாட்டு பிரதமர் உள்ளிட்ட தலைவர்களை குடியரசு தலைவர் சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினார். அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான ஒளிபரப்பு சேவை தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அங்குள்ள இந்திய மக்களையும் சந்தித்து அவர் உரையாடினார். 3 நாடுகளில் 6 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசு தலைவர் திருமதி திரவுபதி

முர்மு இன்று திமோர் நாடு சென்றடைந்தார். தலைநகர் திலி நகரில் அவருக்கு அந்நாட்டு பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அந்நாட்டு ராணுவ வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை அவர் ஏற்றுக் கொண்டார்

*அமைச்சரவை கூட்டம்* 1 (16)

ஷெட்யுல் மற்றும் மற்றும் பழங்குடியின வகுப்புகளுக்கான இடஒதுக்கீட்டில் சமூக பொருளாதார ரீதியில் மேற்பட்டவர்களுக்கு விலக்கு அளிக்கும் கீரிமிலேயர் நடைமுறை கொண்டு வரப்பட மாட்டாது என்று மத்திய அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை மற்றும் ரயில்வேத் துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், அரசியல் அமைப்பு சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, ஷெட்யுல் மற்றும் பழக்குடியினருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று தெரிவித்தார். போக்குவரத்து உள்

கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில், 24 ஆயிரத்து 607 கோடி ரூபாய் செலவில், 8 புதிய ரயில் வழித் தடங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 2024-25 ஆம் ஆண்டு முதல் 2028-29 ஆம் ஆண்டு வரை கூடுதலாக 2 கோடி வீடுகள் கட்ட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்த திட்டத்தின் கீழ், நகர்புறங்களில் 1 கோடி வீடுகள் கட்டப்படும் என்றும அவர் தெரிவித்தார்.



இந்த வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 10 கோடிக்கும் மேற்பட்டோர் பயன் பெறுவர் என்று அமைச்சர் தெரிவித்தார். இயற்கை எரிவாயு போன்ற குறிப்பிடத்தக்க எரி பொருளை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உயிரி எரி பொருள் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக பிரதமரின் ஜீவன்

யோஜனா திட்டத்தில் திருத்தம் செய்யப்படுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த செய்தியாளர் சந்திப்பின் போது, மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் உடனிருந்தார்.

*அமித் ஷா* (12)

இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் நிலைமையை கண்காணிக்க எல்லைப் பாதுகாப்பு படை அதிகாரி தலைமையில் 5 பேர் கொண்ட குழு அமைத்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், பங்களாதேஷில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அந்நாட்டுடனான இந்திய எல்லையில் நிலைமையை கண்காணிக்க மத்திய அரசு குழு அமைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்திய மக்கள், இந்துக்கள் மற்றும் இதர சிறுபான்மையின சமூகத்தினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவதற்காக இக் குழு பங்களாதேஷில்

உள்ள அதிகாரிகளுடன் தகவல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இக்குழுவின் தலைவராக எல்லைப் பாதுகாப்பு படையின் கிழக்கு பிரிவின் கூடுதல் இயக்குநர் செயல்படுவார் என்றும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

ஜெய்சங்கர் (11)

இந்தியா-மாலத்தீவு இடையே வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் ஒத்துழைப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. 3 நாள் அரசு முறை பயணமாக மாலத்தீவு சென்றுள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், மாலத்தீவு வெளியுறவுத் துறை அமைச்சரை சந்தித்து பேசியுள்ளார். இந்த சந்திப்புக்கு பின்னர் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசிய திரு ஜெய்சங்கர், இரு நாடுகள் இடையே நல்லுறவை மேலும் வலுப்படுத்த முடிவு செய்துள்ளதாக தெரிவித்தார். வளர்ச்சி, கட்டமைப்பு, பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் ஒத்துழைப்பு உள்ளிட்ட அம்சங்கள்

தொடர்பாக இந்தியா மாலத்தீவு இடையே புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையம் (11)

வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தொடர்பாக, வாக்காளர்களின் விவரங்களை வீடுகளுக்கு சென்று சரிபார்க்கும் பணி வரும் 20 ஆம் தேதி தொடங்க உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இப்பணி அக்டோபர் 18 ஆம் தேதி வரை வாக்குச் சாவடி அலுவலர்கள் மூலமாக நடைபெற உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவது வழக்கம். இதற்கான அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இந்த பணிகள் அனைத்தும் நிறைவடைந்ததும், வரைவு வாக்களார் பட்டியல் பொதுமக்களின் பார்வைக்காக, அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி வெளியிடப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*நிர்மலா சீதாராமன்* (12)

இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய இயக்குநர்கள் வாரியகுழுவின் கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் இன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி, ரிசர்வ் வங்கியின் ஆளுநர் திரு சக்திகாந்ததாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி நிர்மலா சீதாராமன், மத்திய அரசு கொண்டு வரும் வங்கி ஒழுங்கு முறை சீர்திருத்தங்கள் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டதாக தெரிவித்தார். அந்த திருத்தங்களில் கூட்டுறவு வங்கித் துறை தொடர்பான முக்கியமான மறு சீரமைப்புகளும் அடங்கும் என்றும் அவர் தெரிவித்தார். முன்னதாக, வங்கி சட்டங்கள் திருத்த மசோதாவை நேற்று மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி மக்களவையில் அறிமுகப்படுத்தினார் என்பது குறிப்பிடத் தக்கது.

*சிங்கங்கள் தினம்* (14)

உலக சிங்கங்கள் தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, சிங்கங்கள் பாதுகாப்பு மற்றும் அது தொடர்பான பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பிரதமர் திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்தள்ளார்.. இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள, சமூக வலைத்தள பதிவில் விடுத்துள்ள செய்தியில், குஜராத் மாநிலத்தில் உள்ள கிர் பகுதியில் சிங்கங்கள் அதிக அளவில் வாழ்வதாக குறிப்பிட்டுள்ளார். பல ஆண்டுகளாக சிங்கங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இத்தருணத்தில், கம்பீரமான ஆண் சிங்கங்களை கண்டறியவும், சிங்கங்களை பாதுகாக்க மேற்கொள்ளப்பட் முயற்சிகளையும் காண குஜராத்தில் உள்ள கிர் தேசிய பூங்காவிற்கு வருகை தருமாறும் பிரதமர் கேட்டுக் கொண்டார். இந்த அற்புதமான உயிரினங்கள் நம் நிலங்களில் தொடர்ந்து கர்ஜிப்பதை நாம் உறுதி செய்வோம் என்று மத்திய

தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

*ஒலிம்பிக் (5)*

பாரீஸ் ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் வெண்கல பதக்கம் வென்ற இந்திய அணி இன்று புதுடெல்லி திரும்பியது. மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா வீரர்களை சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார். ஹாக்கி அணியின் சாதனையை கண்டு நாடு பெருமிதம் கொள்வதாகவும் அவர் கூறினார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவிற்கு திமோர் லெஸ்டேவின் உயரிய விருது இன்று வழங்கப்பட்டது.

பிரதமர் திரு நரேந்திர மோடி நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட கேரள மாநிலம் வயநாட்டில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இல்லந்தோறும் தேசிய கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு ஜே பி நட்டா கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியா-மாலத்தீவு இடையே வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் ஒத்துழைப்பு, பாதுகாப்பு உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

பாரீஸ் ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் வெண்கல பதக்கம் வென்று நாடு திரும்பிய இந்திய அணி வீரர்களை மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா சந்தித்து, வாழ்த்து தெரிவித்தார்.